# உதயதாரகை—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at two shillings a year, payable in advance.*

கூம் புத்தகம், சஞ்சிகை ரு.] ௲அ௱சகூ ஸு. பங்குனி மீ. அ தேதி வியாழக்கிழமை Thursday, March 8, 1849. [Vol. IX. No. 5.



### TERMS OF THE PAPER.

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail,* each copy, *inclusive of postage—four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

*Subscribers on the Continent* may receive the paper at *four shillings a year;* their papers having to be sent by mail, and a postage of *one penny,* being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will be inserted as heretofore at the rate of *one penny and a half* each line, reckoning the type at Brevier size or seven and a half lines to an inch.

*All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.*

Communications should be *post paid* to receive attention.

JAFFNA—The Missionaries.
POINT PEDRO—Rev. E. J. Robinson.
CATTAVELY—Mr. J. White.
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs P. B. Fernando and Son.
KANDY—Mr. L. Lawton.
TRANQUEBAR—Mr. Jeddidiah Adams.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
DINDIGUL—Rev. J. Rendall.
MADRAS—P. R. Hunt, Esq.
ISLE OF FRANCE—Mr. George Coe.


## நாற்சமைய கோளரி.

### எம் காண்டம்.—அம் பிரிவு.

இனி மகாவிஷ்டுணுவைக்குறித்துச் சொல்லியது.

இரட்டையாசரியவிருத்தம்.

சிவன்ருங்காதவையழிப்பது திருமால், சிருட்டியாதவைநிலைபெறுத்தல், திறமளித்தழிக்கு மாற்றல்களில்லாத்திசைமுகன் படைப்பதுமணர்ந்தால்—அவர்களிலேவருமுத்தொழிற்குரியோ ரல்லவென்றறிக்றதெள்தா அனைத்தையுமடையாவலியினற்றேற்றி வித்தப்பனுயாளுகின்றவரே—தவங்களையறிந்துசுகங்களைக்கொடுத்து தப்பிதஞ் செய்பவர்க்கெல்லாங்—தக்கதண்டனையுந் தருபவரென்று தரிசனையாவதுதப்பா தெவனெதுமறையினுங் கொள்வினைகொடுப்பினையெச்சமுமுளர்களாயிருந்த விச்சுரன்றிருமாலிவர்களைப் பணிந்தாலேகனைத் தொழுவதாயிடுமோ.—என்பதில் சிவன் தாங்காதவைகளைச் சங்கரிக்கிறதும் விஷ்டுணு சிருட்டியாதவைகளைக் காத்து இரட்சிக்கிறதும், காத்து இரட்சிக்கவும், அவசரமற்றதுகளை அழித்துப்போடவும், பலமும் ஞானமுமில்லாத பிர்மா சிருட்டிக்கிறதும் எப்படியியலுமென்று சிந்தித்துணர்ந்தால் அவர்கள் முவரிலெவருஞ் சிருட்டி திதி சங்காரமென்கிற முத்தொழிலுக்குரியவர்களல்லவென்று அறிகிறது எளிதுமாய் அனைத்தையும் பிறரால் அடையாத பலத்தினல் சிருட்டித்து தாம் சிருட்டித்திருக்கிறவைகளையெல்லாம்பிதாவடைவாய்க்காப்பாற்றி ஆளுகிறவரெவரோ அவரே புத்தியுள்ள மனுஷர் செய்கிற தெய்வபத்தி தவங்களையறிந்து மோட்ச சுகங்களைக் கொடுத்து தப்பிதஞ்செய்கிறவர்களுக்கெல்லாந் தகுமான தண்டனையுங் கொடுக்கிறவரென்று திருஷ்டாந்தரமாய்த் தரிசிக்கிறது தப்பாதுமாய் முடியும். மற்றப்படி எவன் என்னசொன்னுலும் கொள்வினையுங் கொடுப்பினையும் பிள்ளைகளுமுடைய சமசாரிகளாயிருந்த சிவன் விஷ்டுணுவென்கிற இரண்டு மனித இராசாக்களைஇப்பொழுதுபணிந்தால் அதுஒன்ருன பராபரவஸ்துவைத் தொழுகிறதாய்ப் பலன்தருமோவென்றிருக்க நாங்கள் வேதத்திற்கு அயோக்கியரென்றும், மேற்படி,

அந்தமாலரன்வைகுண்டமுங்கயிலையுமளிக்கவேயளிக்கிறதுண்டே, அவர்களில்லாட்கள் புத்திரருக்குமரிச்சனைசெய்கிறதறிவா—கந்தனை வள்ளி தெய்வானையைப்பணியக் கடம்பனுக்கொரு சிவமுண்டா—கணபதியகோரவீரபத்திரனைக் காடுறை ஐயனைத் துதிப்போர்க் கெந்தநாடுண்டு மனைவிபூமானுமாயிம்மையிலிருந்து வாழ்ந்திறந்தோர்—எப்படித்தேவர்கள்தேவிகளாவரெங்கே தண்டமிழரின்புத்தி இந்தநல்லுலக நாயகனறிவுக்கிணங்குவீர்சுகப்படவிப்போ விச்சுரன்றிருமாலிருவரைப்பணிந்தால் ஏகனைத்தொழுவதாயிடுமோ. என்பதில் சுந்தர விஷ்டுணு வைகுண்டத்தையுஞ் சிவன்கைலாயத்தையும்கொடுக்கவே கொடுக்கிறதுண்டென்றால் அவர்கள் பெண்சாதிகளுக்கும் பிள்ளைகளுக்குந் தெய்வாராதனை செய்கிறது புத்தியுள்ள காரியமாகுமா? கந்தனையும் அவருடைய பெண்சாதிகளாகிய வள்ளியையுந் தெய்வானையையும் பணிகிறவர்களுக்குக் கொடுக்கக் கந்தனுக்கொரு மோட்சவீடுண்டா? மகாகணபதியையும் அகோர வீரபத்திரனையும், சிவனுக்கும் விஷ்டுணுவுக்குங் காட்டிலே பிறந்து காட்டிலேவாழ்ந்த ஐயனரையுந் துதிக்கிறவர்களுக்கு எந்த இராச்சியங் கிடைக்கும்? பெண்சாதியும்புருஷனுமாயிம்மையிலிருந்து வாழ்ந்திறந்துபோன மனிதர் எந்தப் பிரகாரமாய்த் தேவர்களுந் தேவிகளுமாவார்கள்! குளிர்ச்சியுள்ள தமிழராகிய சதுர்வேதசித்தாந்த அந்தகருடைய புத்தியெங்கே? சுகப்படுகிறதற்கு இந்த நல்ல உலகநாயகனுடைய அறிவுக்கிணங்குவீர்களாக, இப்பொழுது சிவன் விஷ்டுணுவென்கிற இரண்டு மனித இராசாக்களைப் பணிந்தால் அது ஒன்றன ஏகனுகிய யேசுக்கிறிஸதுவைத் தொழுகிறதாய்ப் பலன் தருமோவென்றிருக்க நாங்கள் வேதத்திற்கயோக்கியரென்றும், மேற்படி,

இன்னும் வரும்.

---

## தோறேணு பட்டினத்தின் மேற்றிராணியாரும் யாழ்ப்பாணத்து அப்போஸ்தோலிக்கு புரோவிக்காரியாருமாகிய, மகா கனம்பொருந்திய ஓராசியுஸ் பேத்தக்கினி அவர்களுக்கு.

எனதருமையான ஐயாவே,

இலங்கையின் இப்பகுதியில் நீர்படும் பிரயாசத்தையும், பூசை கொம்பசம் முதலியவைகளுக்குச் சனங்கள் வரும்படி நீர் செய்யும் பிரயெத்தனங்களையும், நான் வெகுகாலமாய் விளிப்புடன் கவனித்து வருகிறேன். உம்முடைய சபையிற் சேர்ந்தசனங்கள் நீர் உமது நோக்கத்தை முடிக்கும்படி செய்யும் பிரயெத்தனங்களைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியுடையவர்களாய்க் காணப்பட்டார்கள். ஆகிலும் சில சமையங்களில் உம்மைத் தங்களுடைய நிலையான சுயாதீனத்திற்கு விரோதஞ்செய்கிறவராக எண்ணி விரோதித்தார்கள். நீர் உம்முடைய தேசத்திலிருந்து இவ்விடம் வந்து சேர்ந்த நாட்களில் நீர் போனதெருக்கள் அலங்கரிக்கப்பட்ட சோடினைகளாலும், உம்முடைய வருதலை வாழ்த்துதல்செய்த பீரங்கிச்சத்தங்களாலும், வெடிச்சத்தங்களாலும், உம்முடைய சனங்கள் உம்மிற்கொண்டிருக்கும் மிகுந்த அன்பும் உமது சங்கையைப்பற்றிய நல்வயிராக்கியமும் எவ்வளவென்று பூரணமாய் அறியலாம். உமது குருவூழியத்துக்கடுத்த காரியங்களைப்பற்றி நான் விசாரணைபண்ணிவந்தாலும் உம்முடன் கொஞ்சமும் பழக்கமற்றவனுயிருக்கிறேன். ஆகிலும் என் சினேகிதரில் அநேகர் உம்முடைய சங்கிக்கப்பட்ட சினேகிதரும் உமது நோக்கத்தில் வயிராக்கியருமாயிருக்கிறார்கள். அவர்களிற் தேவபத்தியுள்ளவர்களென்றெண்ணப்பட்டவர்கள் தானும் அறியாமையும் கேடான வீண்பத்தியுமுடையவர்களாய் இருக்கிறார்கள். நீர் இம்முறையிற் குரிசுமதிக்கும்பெருநாளன்று பெரியமாதாவின்கோவிலிற் கூடிவந்த சனங்களுக்கு அவர்கள் தங்கள் பிள்ளைகள் சுத்த கிறிஸ்துமார்க்கப் (Protestant) புத்தகங்களை வாசிக்க இடங் கொடுக்கவேண்டாமென்றும், தாங்களாகுதல் அப்புத்தகங்களை வாசிக்கவேண்டாமென்றும் கட்டளை கொடுத்தீர். இப்படிப்பட்ட கட்டளை என் சினேகிதரையும் என் தேசத்தின் மற்றநேகரையும் தாழ்த்தவும் கெடுக்கவும் கூடியதால் மெத்த விசனப்படுகிறேன். எங்கள் தேசத்தில் ரோமான்மதத்தைப் பிரபலியப்படுத்தும்படி நீர் கொண்டிருக்கும் நோக்கத்திற்கு விரோதமான சத்துருக்களிற் பிரதான சத்துரு என்னவென்றால் விவிலியவேதாகமமே. இதுவே பிரதான சத்துரு. இச்சத்துருவே தேவாசீர்வாதத்தால் மறுத்தீனு லூதர் என்பவரை எழுப்பி, அவர் செங்கோலுடைய அந்துச்கிறிஸதுவின் வல்லமையை எதிர்க்கப்பண்ணினது. தம்மைத்தாம் வஞ்சிக்கும் அநேக ரோமான்மார்க்கத்தவர்களை ஓர்காலத்தில் அழித்த ஞானவாதையின்னின்று எளியவர்களுஞ் செல்வாக்கற்றவர்களுமான வஞ்சகரைக்காப்பாற்றினதும் இச்சத்துருதான். இந்தச்சத்துருவுடனே தள்ளுதலினுகமம் என்னும் ஒன்றைச் சேர்த்தீர்கள். ஆயினும் அதின் விரோதம் போகவில்லை. அருமையான ஐயாவே, மறுபடியுஞ் சொல்லுகிறேன், இதுவே பிரதான சத்துரு. உங்கள் சன்னியாசிகளிலொருவர் "புதியேற்பாடு சற்பங்களாலும் முள்ளுக்களாலும் நிறைந்த புத்தகம்," எனச்சொல்லுகிறார். தோமாஸ் லின்னசா என்னும், படிப்புங் கீர்த்தியுமுள்ள ஓர் ரோமான கத்தோலிக்கக் குரு, புதியேற்பாட்டை ஒருக்காலும் வாசித்ததில்லை. அவர் தமக்கு மரணகாலஞ் சமீபித்தகாலத்தில் (அதாவது ௲ருளஉயச ம். ஸு அதைக்கொண்டுவரும்படி கட்டளைபண்ணினர் "ஒருபொழுதென்கிலும் ஆணையிடாதிருங்கள்" என்ற வார்த்தைகளை அவர் அதிற் கண்டபடியால் அப்புத்தகத்தை எல்லாருக்கும் முன்பாக எறிந்துபோட்டு "இது சுவிசேஷமல்ல, அல்லது நாங்கள் கிறிஸ்தவர்களல்ல" என்றுசொன்னர். உமது சபையார் சுத்தகிறிஸ்துமார்க்கப் புத்தகங்களை வாசிக்கில் இப்பெரியசத்திருவோடும் தோழமைபண்ணவரும், இதினல் உமதுநோக்கம் அவத்தமாய்விடும். இதற்கும்பயந்துதான் கட்டளையுண்டுபண்ணப்பட்டது. நல்லபுத்திசெய்தீர். அநேக ரோமான் மார்க்கத்துமாணுக்கர் விவிலிய ஆகமங்கள் வாசிக்க இடங் கொடுக்கிறீர் ஆனல் இவைகளில் முன்சொல்லப்பட்ட தள்ளுதலினுகமங்களிருக்கிறது. உங்களாற் சங்கிக்கப்பட்ட சுத்தவாளனுன அற்சிஷ்ட்ட யேரோம் அந்த ஆகமத்தினேர்புத்தகத்தைக் கட்டுக்கதையெனச் சொல்லுகிறார். மற்றப்புத்தகங்களைப் பற்றிய அவருடைய எண்ணம் எனக்குத்தெரியவரவில்லை. மற்றுமநேககாரியங்களைப்பற்றிய உங்கள் போதனைகளிலநேகம் அச்சுத்தவாளனுடையபோதனைகளுக்கு முழுதும் விரோதமாய் இருக்கின்றன. உம்முடைய நோக்கத்திற்கு இரண்டாம் விரோதிகள் என்னவெனில், உதயதாரகை, வேதத்தைப்பற்றிய துண்டுப்புத்தகங்கள் முதலியவைகளே. உதயதாரகை உம்முடையவேதத்தின் மாயமான காரியங்களை பிரசித்தம்பண்ணுவதால் அதுவுஞ் சத்துரு அது பாப்புவானவருக்கு ஒரு கழுதையை உண்டுபண்ண வல்லமையில்லாதிருப்பதுபோல, ஓர் மனிதனைச் சுத்தவாளுக்கவும் வல்லமையில்லையெனச் சொல்லுகிறது. ரோமைமார்க்கத்தார் சந்தேகமற்ற அதிகாரமுடையதெனச் சொல்லுகிற சிலகாரியங்கள் தப்பிதமெனக்காட்டி இதற்கு உதாரணங்களுஞ் சொல்லுகிறது. இதுமாத்திரமல்ல உதயதாரகை, பாப்பு அழுகிறார் என்றும், ஆளுகை அவர்கையிலிருந்து பறித்தெடுக்கப்பட்டதெனவும் காடினல்கள் ரோமைநகரிக்குள்வர இடங்கொடுக்கப்படாதுஎனச் சொல்லப்பட்டதெனவும் கூறுகிறது. கொழும்பு, இயாழ்ப்பாணம் என்னும் இடங்களிலிருக்கும் ரோமான் மார்க்கத்தவர்களுக்குள் நடந்த குழப்பங்களைப்பற்றிச்சொல்லுகிறது ரோமைமார்க்கம் ஒழுங்கீனத்தின்மார்க்கமெனக் காட்டுகிறது. மேலும் ரோமான்மார்க்கம் பரம்பிவருகிற ஐரோப்பாவின் பகுதிகளிலிருக்கும் சன்மார்க்கத்தாழ்ச்சியை அறிவித்து றப்பிறமாதுவேதமே (Reformation) பெரிய பிறித்தானியாவைப் பத்திரப்படுத்துவதெனச்சொல்லுகிறது. சுருக்கமாய்ச்சொல்லுகில் துண்டுப்புத்தகங்களும், உதயதாரகையும் இப்பெயர்ப்பட்ட மற்றும் புத்தகங்களும் ரோமான் மார்க்கத்தைப் பின்பற்றுவோர் அம்மார்க்கத்தைப் பற்றிச் சொல்வது தப்பிதமெனக் காட்டுகின்றன. சுத்த கிறிஸதுமதப் புத்தகங்களை வாசிக்கப்படாதென்ற கட்டளைக்கு ஞாயங்கள் இவைதான்.

உமது சபையார் சுத்த கிறிஸதுமதப் புத்தகங்களை வாசிக்கப்படாதென்ற கட்டளை பாப்புமதத்தின் சுயகுணத்துடன் ஒவ்வினதாயிருக்கிறது. ஐயா, பாப்புமதத்தின் கிரியைகள் பொல்லாங்கானதால் அம்மதம் ஒளியைப்பகைக்கிறது. ஏன், ரோமான் மார்க்கப் பிள்ளைகள்படிக்க நான் ஒரு பள்ளிக்கூடம் வைக்கவில்லையோ என்பீர்? அப்பள்ளிக்கூடம் அதிகமாய்த் தேறுதற்கு ஏற்றதல்ல (எனச் சில மாணுக்கர் சொல்லுகிறார்கள்) ஏன் அப்படிப்பட்டதாயிருக்கவில்லை? கோவில்களிற் சேர்க்கப்படும் பணத்தை என்னசெய்கிறீர்? அதெல்லாங் குருமார் செலவளித்துப் போடுகிறார்களோ? அல்லது இப்போ இராசாவாயிராமல் பாப்புவாய்மாத்திரம் இருக்கும் வையுஸ் என்பவருக்கு அனுப்புகிறீர்களோ? காரியமிப்படியிருக்கில், சனங்கள் தாங்கள்தானே சிறுமைப்படும்பொழுது மற்றவர்களுக்குக் கொடுத்தலைப்பார்க்கும்பொழுது தாதன்தான்! இதுநிற்க, பாப்பு

மார்க்கம் அறியாமையின் மார்க்கம். "அறியாமை
யே தேவபத்தியின்தாய்" என்ற பழமொழியிற்முன்
முன்சொல்லப்பட்ட கட்டளை நிற்கிறதுபோல, அ
நேக ரோமான்மார்க்கக்குருமார் கொஞ்ச நாற்முன்
டுகளுக்குமுன் வாசிக்க அறியாதிருந்தார்கள். அப்
போ எந்த எளியவனுடஞ்சப்பெடிச்சியும் வாசிப்
பாள். இவினிக், என்னப்பட்ட விஸ்ப்பு தாம்வாசி
க்க அறியாதிருந்தும் பாப்புவைப் பிரியப்படுத்தும்படி
பதிதப்புத்தகங்களெனத் தாமெண்ணின புத்தகங்க
ளைச் சுட்டெரிக்கப்படும்படி தீர்த்தார். இப்படிக்
கொத்த விஸ்ப்புக்கள் இப்போவும் உலகத்திலிருக்கி
றார்களோ என்னவோ அறியேன். எனது அருமை
யான ஐயாவே, மாணாக்கர் ரோமான் மார்க்கத்தின்
படி சரியாய் நடக்கில் இங்கிலீஸ்பாஷையில் தேற
மாட்டார்கள் ஏனெனில் மில்றன், அடிசன் என்
பவர்களுடைய புத்தகங்களும் மற்றும் பிரதானமனி
தருடைய புத்தகங்களும் வாசிக்கப்படாதெனக் க
ட்டளைகளிருக்கின்றன. ஒருவேளை முதிர்ந்தவர்க
ளும் புத்தியுள்ளவர்களுமாத்திரம் இப்புத்தகங்களை
வாசிக்கலாமாக்கும். காஸ்லைற் என்னும் வெளிச்
சந்தானும் உமது மார்க்கத்துக்கு விரோதமாம். இக்
கால சாஸ்திரத்தின் தேற்றங்களிற்சிலதும் உம்மு
டைய மார்க்கத்திற்கு விரோதமாக்கும். சடங்கு நி
றைந்த மார்க்கத்தின் சுபாபம் இதுதான். ஆ! மேற்
கு விக்கிரகாராதனையின் கேடெவ்வளவு! மிகவுந்து
க்கப்படத்தக்கது. மகாகனம்பொருந்திய ஐயாவே,
முதல் விவ்லியாகமத்தினிடம் போம் அதன் பின்
கட்டளைகளைவிடும், என்று கெஞ்சிக்கேட்கிறேன்.
மார்க்கபோதனைகளுக்காகமனிதகட்டளைகளைப்ப
தில்வையாதிரும். அப்போ எல்லாஞ் சரியாயிருக்கு
ம். இச்சிறுகடிதத்தில் முன்பேசப்பட்ட காரியங்க
ளைப்பற்றி அல்லது வேறுகாரியங்களைப்பற்றி அதிக
மாகவொன்றுஞ் சொல்லக்கூடாது. தேவனுக்குச் சி
த்தமானால் இனிமேலுஞ் சில காகிதங்களை உமக்கு
அனுப்புவேன். இப்படிக்கு, உமது தாழ்
மையுள்ள ஓர் கத்தோலிக்கன்.

# உதயதாரகை.

## ௲௮௱௬௰௫ பங்குனி மாதம், ௨. தேதி.

### யாழ்ப்பாணம்.

அவமரணம்.—இற்றைக்குச் சிறிதுநாளைக்குமுன்
னே சுளிபுரம் ஆறுமுகம் மயில்வாகனம் என்பவ
ரை மாடுதூக்கியெறிந்ததினால் அவர் விழுந்து சடுதி
யாய்க் காலஞ்சென்றுவிட்டார். மேலும் நவாலியிலி
ருந்த ஒருவன் விஷந்தீண்டப்பட்டு உடனேமரித்துப்
போனான்.

குருமார்வருகை.—யாழ்ப்பாணம் மதுரை சென்
னைபட்டினத்து அமிரிக்கன்மிசியோனுக்கு உதவியா
க அமரிக்கன் சங்கத்திலிருந்து அனுப்பப்பட்ட குரு
மார்கள் போனமாதம் இருபதாந்தேதி சென்னைப
ட்டணத்தில்வந்து சேர்ந்தார்கள். யாழ்ப்பாணத்
துக்குவரவேண்டியவர்கள் இந்தமாதம் ௯ந் தேதிசெ
வ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் வந்துசேர்ந்தா
ர்கள்.

### கொழும்பு.

போனமாதம் இருபத்தினாலாந்தேதியிற் பிரசுரஞ்
செய்யலான எக்சாமினர் என்னும் சமாசார பத்தி
ரிகையிற் கண்டிருக்கும் சமாசாரமென்னவெனில்
லெக்மன் என்ற ஒருவரும் சீமோன் கியென்ற வே
றொருவரும் கண்டியில் ஸ்தாபித்திருக்கின்ற ஒறியந்
தல் என்னும் வங்குக்கடைக்குட்போனார்கள். அந்
தவேளையில் மெஸ்தர் ஏல் என்னும் பேரையுள்ள
ஒருவன்கியென்பவரைப்பழித்து நிந்தனையாய் ஏசிப்
பேசிக் கடைசியாய் சவுக்கேடுத்து அவருடைய மு
துகிலே அடித்தான். அப்பொழுது இருபேருக்கும் அடி
பிடி உண்டாயிற்று. போலிஸ் உத்தியோகஸ்தர் வ
ந்து ஏல் என்பவனைப்பிடித்து மஸ்திரத்துக்குமுன்
கொண்டுபோய்விட்டுவிளங்கிக்குற்றவாளியாக்கி மறி
யலிற்போடுவித்துத் திரும்பவும் கிய என்பவருடைய
கேள்விப்படிக்கு அவரை மறியலிலிருந்து விடுதலை
யாக்கிவிட்டார்கள். அப்படியிருந்தும் ஐந்துபவுன் அ
வருக்கு அபராதம் போடுப்பட்டது. தன் கோபத்தை
ச் சாதியாமல் அதை அடக்கி தன் நடையையும் ஐ
ந்துபவுனையும் பத்திரப்படுத்துகிறவன் பாக்கியவான்.

### லாகோர்.

லாகோர்லிருந்து இச்செலவுவந்த சமாசாரங்களி
னால் அறியவருகிறதென்னவெனில் இங்கிலீசு காரரு
க்கும் சீக்சாதியாருக்கும் திரும்பவும் ஓர்வல்யுத்தம்
நடக்கிறதற்குஏதுவாயிருந்தது இங்கிலீசுகாரர் தங்களு
க்குத் துணையாகவரும்படியெழுதின படைசனங்க
ள் வரமுன்னாதாக சீறிசிங்கமென்பவன் தனது தா
னைகளை இங்கிலீசுப்பட்டாளமிருந்த இடத்திலேபோ
ய் நிற்கப்பண்ணி அவர்களுடன் யுத்தத்திற்கு ஆயத்
தம்பண்ண எண்ணியிருந்தான்.

கலாவல்லபியாக உலகத்திற் பெயர்பெற்றிருக்கி
ன்ற சிறிதோமஸ் மிற்செல் என்பவர் சமுத்திரத்துக்
கூடாகத் தள்ளும்படிக்கு ஓர்வகையான சங்குச்சு
ரியாணியை நூதனமாகக் கண்டுபிடித்திருக்கிறார். அ
தின்வழியாகப் பெரிய புகைக்கப்பல்களை ஒருநா
ளைக்கு அஞ்ஞூறு கட்டையளவுக்கு அல்லது ஒரும
ணித்தியாலத்துக்கு இருபதுகட்டையளவுக்குத் தள்
ளிக்கொண்டுபோய்விடும். அல்லது இங்கிலாந்திலி
ருந்து பதினாறுநாளைக்குள்ளே இந்தியாவுக்கு வந்துவி
டலாம்.

"தைக்கிறிஸ" என்ற உருசேதம்போனது.

இலங்கைத்தீவிலிருந்து லொங்தோம்பட்டணத்து
க்குப் போக்குவரத்துப்பண்ணும் பயணக்காரரைஏ
ற்றிக்கொண்டுவந்த கப்பல் இச்செலவு சீர்மையிற்
சேதம்போய்விட்டது. அப்படியிருந்தும் அதிலிருந்த
பயணக்காரரும் மற்றும் கப்பலாட்களும் யாதாமொ
ரு சேதமின்றித் தப்பிக்கொண்டார்கள். ஆனாலும்
அந்தக்கப்பலும் அதில்வைத்திருந்த சரக்குச்சாமான்
களனைத்தும் சேதமாய்ப்போய்விடுமென்று பயப்ப
டவேண்டியிருக்குது.

நியூசீலாந்திலுண்டான பூகம்பம்.

பூமிக்கு எதிர்ப்பக்கத்தில் இலங்கைத்தீவின் அட்
சபாகைக்குத்தென்பக்கமாய்ஏறக்குறைய மூவாயிர
ம் கட்டைதூரத்துக்கப்பால் நியூசிலந்து என்ற பே
ரைக்கொண்ட பலகூட்டமான ஒரு தீவுண்டு.
அது நாங்களிருக்கின்ற இலங்கைத்தீவிலும் நாலத்
தனைபெரிதாயிருக்கின்றது. அதிலுள்ள சனங்க
ளோ காட்டுத்தனமுள்ள வேடருக்குச் சமானமுள்
ளவர்கள். ௲௮௱௰௪ ஆண்டளவிற் கிறிஸ்துமார்க்
கக் குருமார் அவ்விடத்துக்குப் போகத்தலைப்பட்டா
ர்கள். ஏரோப்பை தேசத்திலிருந்து இங்கிலீசுகார
ர் இவ்விடத்துக்கு வந்து குடியிருந்ததினாலும் வேறும்
சிறிதுகாரியத்தினாலும் இங்கிலீசுகாரர் இத்தீவில் வர
வர வருடத்திற்குவருடம் அதிகம் பலுகிப்பெருகி
ஆயிரத்து எண்ணூற்று நாற்பதாமாண்டளவில் இத்
தீவை இங்கிலீசுக்கொலனியாக்கிக் கொண்டார்கள்
இவ்விடத்தில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட ஐரோப்
பையர் இப்பொழுது வாசம்பண்ணுகிறார்கள் அவர்
களுக்குப் பிரதானமாய் மூன்று இடங்களுண்டு அவ
ற்றுள் ஒக்கிலாந்து என்பதே தலைமைபெற்ற தீவ
அவ்விடத்தில் மகராசா ஒருவரும் ஆலோசனைச்ச
க்கிடுத்தாரொருவரும் திறசேர்காரியங்களை விசார
ணைபண்ணுகிறதற்கான ஒரு பொக்கிஷகாரனும்
மூன்று சமாதான நீதவான்களுமிருந்து இராச்சியம்
பண்ணிவருவதுமன்றி ஒரு விசோப்பு என்னும் குரு
வானவரும் இங்கிலாந்து சபையைச்சேர்ந்த பன்னி
ரண்டுபேருக்குமேற்பட்ட குருமாரும் கிறிஸ்துமத வே
று அறுபது எழுபது குருமாரும் இத்தீவிலுண்டு. இ
த்தீவுகள் அடங்கலிலும் பிறகிட்ட அற்பசிமாதத்தில்
மிகவும் கொடிதான பூமிஅதிர்த்தல் உண்டாயிற்று.
ஆகையால் இந்த விதனசங்கதியை வாசிப்பவன் ஒ
வ்வொருவனும் இப்படிப்பட்ட கொடிய உபத்திரவ
த்தைசருவதயாபரானகடவுள் இத்தீவிலும் வரவொ
ட்டாமல் விட்டதற்காக அவருக்கு நன்றியறிந்தவனா
யிருக்கவேண்டியது.

"அற்பசிமாசம் பதினெட்டாந் தேதி வெள்ளிக் கி
ழமை சற்றே உட்டணமாயிருந்தாலும், மேகத்தில்
யாதொரு மறுவுங் காணப்படவில்லை. ஆனாலும்
பொழுதுபட்டவுடனே உட்டணம் மாறிச் சனிக் கிழ
மை சோழகக் காற்றும் கொண்டற்காற்றும் அடி
த்து மழையுமுரத்து நாயிற்றுக்கிழமையளவும் பெய்
தது. மற்றநாட் திங்கட்கிழமை மத்தியானம் ஒன்
றரை மணிபோலே வெகு தூரத்தில் வெகு கெதியா
ய் அடுத்தடுத்துப் பெரிய முழக்கங் கேட்டு இரண்
டொரு நிமிஷஞ் செல்லுகுது செல்ல முன்னே முன்
னொருகாலும் உலகத்திற் கண்டுங் கேட்டுமிராத மா
திரியான பூமியதிர்த்தலுண்டாகி மாறிமாறி அன்றிரா
த்திரி ஏழரைமணியளவும் நிலைத்துநின்றது. சுட்ட
மண்ணினாலும் பச்சைக் கற்களினாலுங் கட்டப்பட்
ட வீடுகளெல்லாம் அசைந்துகுலுங்கிப்படபடென்
றிடிந்துவிழுந்தன. வேசிலியோன் குருமாருடைய
கோவிலும் மறியல் வீடுகளும் மற்றுங்கோவரணமே
ந்தாருடைய கச்சேரி திறைசேரி முதலிய பிரஸ்தாப
மான வீடுகளும் பிரதானமாய் நட்டப்பட்டன. தி
ங்கட்கிழமை முழுதும் நாலுமூன்று தரம் பூமியதிர்ந்த
து. மேகத்தின் கோலம் ஒருவிதமாயிருக்கிறதினாலே
முன்னிலும் கொடிய அதிர்த்தலுண்டாகப்போகுதெ
ன்று அநேகர் பயந்திருந்தாலும் அன்றிராத்திரி முற்று
ம் வானம் வெளித்திருந்தது. பிற்பாடு செவ்வாய்க்
கிழமை இராத்திரி நாலுமணி தொடங்கிக் காலமே ஏ
ழரை மணியளவும் இரண்டுதரமதிர்ந்தது. திரும்பச்
சோழகக்கொண்டலடித்து அன்றுபின்னேரம் முன்
றரைமணி போலே முன்னிலுங் கொடிதாய் அதிர்ந்
தது. அந்நேரம் அவ்விடத்திலுள்ள வீடுகளெல்லா
ம் மதிலோடே பெயர்ந்து சனங்களை அமுக்கிப்போ
டுமென்று சனங்கள் பயந்து தத்தளிப்புக்கொண்டா
ர்கள். சிப்பாசிமார் இருக்கும்படி கட்டுவித்த வீட்டு
க்குச் சரசந்து உத்தியோகமாயிருந்த இலவல் என்ப
வரிலும் அவருடைய பிள்ளைகளிரண்டுபேரிலும் மதி
ல் தகர்ந்து விழுந்து அவர்களைக் கீழே நரிய அமுக்க
ப்போட்டது மதில் விழுந்து கிடந்த கற்களைப்பிரித்
துப் பார்த்தபொழுது அந்தப் பிள்ளையிலொன்று செ
த்துக்கிடந்தது. மற்றப் பிள்ளைக்குமதிகமாய்ப் பட்
டிருந்தபடியால் இரண்டு நாழிகைக்குள்ளே அதுவு
ஞ் செத்துப்போயிற்று. அப்படியே இவர்களுடைய
தகப்பன் சரசந்துவும் திரும்பக் கொஞ்சநாளைக்கு
ள்ளே செத்துப்போனார்.

துன்பக்காரரைவிட்டுப்பராபரித்த ஆசுபத்திரிகளு
ம் மறியற்காரர் இருந்த மறியல் வீடுகளும் அசைந்து
அதிலிருந்தவர்களைப் பிடித்து வேறிடத்திற் கொண்டு
போய்விட்டார்கள். புதன் கிழமை இரண்டு மூன்று
தரமசைந்தது. இன்றைக்குப்பூமியதிர்த்தல் முற்றா
ய் நின்றுபோமென்று அநேகர் காத்திருந்தாலும் அவ
ர்கள் எண்ணப்படி நடக்கவில்லை. ஏனென்றால்,
மற்றநாளும் வியாழக்கிழமை காலமே அஞ்சுமணி
யளவில் முன் ஐந்து நாளிலும் அசைந்ததிலும் பார்
க்க அதிக வலுமையாய்ப் பூமியசைந்தது. முன்னே
நெரிந்து தகர்ந்துகிடந்த வீடுகளையும் மதில்களையும்
பேர்த்து நிருதூளியாக்கி விழுத்திற்று. வேசிலியோன்
குருமாருடைய கோவிலும் செங்கற்களினாற் கட்டியி
ருந்த வேறொரு வீடும் அடியோடே தகர்ந்து விழுந்த
ன. அப்படியே பெரிய விஸ்தாரமான வீடுகளின்
மதில்களும், பீரங்கி முதலிய இரஸதுக்கள் இருந்த வீ
டுகளும் அடியோடே பேர்ந்தன. சிறிது மதில்களி
ன் நாலு பக்கமும் நெரிந்து முரிந்துபோயின. நிலத்தி
லுஞ் சிறிதிடத்திலே பிழப்புண்டாயிற்று. பிரதானமா
ய்க் கடற்கரையோரத்திலே அதிக விஸ்தாரமான க
மாருண்டுபட்டது மற்றநாள் முழுவதும் பூமிசொற்
பமாய் அசைந்தசைந்துகொண்டேயிருந்து காலமே
ஏழுமணியிலும் மத்தியானம் பன்னிரண்டுமணிக்குப்
பன்னிரண்டு நிமிஷஞ் சென்றதின்பின்னாலும் அதி
கவலுக்கொண்டசைந்தது. புதன்கிழமை இரவும்ம
ற்ற நாட் காலமேயும் சோழகக் கொண்டலுமடித்
து மழையுமுரத்துப் பெய்தது அன்றிராத்திரி மழை
அமர்ந்தது. தெற்கே வானத்தை அண்ணாந்து பார்
த்தபொழுது அக்கினிச் சொருபமான ஒரு பளபளப்
பு எட்டு மணி தொடங்கிப் பன்னிரண்டு மணியளவு
ம் மேகத்தில் அதிகந் துலக்கமாய்க் காணப்பட்டுப்
பிறகு வரவரப் பிரபை குறைந்து அற்றுப்போயிற்று.

அவ்விதமான ஒரு பிரபை புதன் கிழமை கால
மேயும் நாலரைந்து மணிக்கிடையிலே மேகத்திற் கா
ணப்பட்டிருந்ததாகக் கற்பித்தான் குரேவென்பவர்
கவனித்தார். வெள்ளிக்கிழமையும் விட்டு விட்டுப்
பதின்மூன்றுதரம் பூமியதிர்ந்தது. அடுத்த சனிக்கி
ழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமையிலும் பூ
மியதிர்ந்தது. பூமியதிர்தல் முற்றும் நின்றுபோயிற்
றென்று எண்ணிப் பூமிஅதிர்த்தலினால் இடிந்து தகர்
ந்து கிடந்த வீடுகளையும் மதில்களையும் செப்பனிட
ப் பிரயெத்தனப்பட்டார்கள். ஆனாலுஞ் செவ்வாய்
க்கிழமை பின்னேரம் இரண்டு மணிக்கு அறு நிமிஷ
த்தாலே பூமி மூன்று நிமிஷத்துக்குள்ளே நாலுதரம்
வலுக்கொண்டசைந்தது அதிலிரண்டாம் அசை
வு முன்னிலுமதிகங் கொடிதாயிருந்தது. அன்றுதொ
டுத்துக் கார்த்திகைமாதம் இரண்டாந் தேதியளவும்
ஒருவிதமான இரைச்சலுடன் பூமியதிர்ந்துகொண்டி
ருந்தது. நியூசிலந்தின் மற்றப் பகுதிகளிலும் பூமி வ
லுக்கொண்டசைந்ததென்றும்மாவீடுகளிலும் மண்
வீடுகளுக்குண்டான சேதம் அதிகமென்றுமெழுதிவ
ந்தது கோவர்ணதேசாதிபதியவர்களும் சனங்களு
க்குண்டான இக்கட்டிடைஞ்சலைத் தீர்க்கும்படிக்கு
த் தன்னாலான உதவியோத்தாசைகளைச் செய்து
வருகிறதுமன்றி வீடுவாசல் அழிந்தவர்களைக்கொண்
டுவந்து கோவரணமேந்தின் வீடுகளிலே விட்டுப் ப
ராபரிக்கிறார்.

முன்னே சொன்ன மூன்று பேருடைய சீவனுக்கு
ப் பூமியதிர்த்தலினாற் சேதமுண்டானதேயல்லாமல்
மற்றும்படி கடவுள்கிருபையாய் ஒருவருக்கும் யாதா
மொரு சேதமில்லை. கரையிலே இருப்பதிலுங் கட
லிலேபோயிருந்தால் தங்களுக்கு மோசம் மெத்தவ
ராதென்று அநேகரெண்ணிக் கப்பல்விட்டிருக்குந்
துறைமுகங்களுக்குப்போய்க் கப்பலைச்சூழ ஏறியிரு
ந்தார்கள். அந்தக் கப்பல்களிலொன்றுக்குக் கப்பி
த்தானாயிருந்த மில்ஸ என்பவர் தன்னிடமடைந்த
சகலருக்கும் வேண்டிய உதவியைச் செய்ததினால்
எல்லாருமாய்க்கூடி எழுபதுபவுண்சேர்த்து அவருக்
கு ஞாபகக்குறிப்பாகக் கொடுக்கும்படி ஒரு தட்டத்
தை விலைக்குவாங்கி இருக்கிறார்கள்."

MORNING STAR.

Jaffna, March 8th, 1849.

*For the Morning Star.*

## A PIECE ON INDUSTRY.

FELLOW COUNTRYMEN:

Having taken a deep interest in the welfare and elevation of my nation in spiritual and temporal affairs, I feel it to be my duty to communicate to you some of the points of which it seems to me that most of you have not taken notice. If the intelligent inhabitants of this Province should take this subject into their candid consideration, they will, I suppose conclude that the moral degradation of their country is the sole cause of its misery.

The wealth and elevation of a country is always proportional to the number of *men of principle* native to her soil. Here I ought not to omit mentioning that those who have not received a course of education have manifested in their conversation that *principle* must belong to Christians only, thereby meaning that Christianity is the only religion which enforces *principle* upon its devotees: such an observation from heathens themselves adds proof to the excellency of Christianity, but at the same time it must be borne in mind that there is a vast difference between the *religion* and *principle* of a man. A man may possess principle without religion but not vice versa. *Religious* principle is a thing arising from a sense of duty to God and his revealed will; but mere *principle* often from a constitutional propensity common to the human species, admitted without examination, and imbibed as frequently from observation and circumstances as from any direct personal efforts. The excellency of the religion of a man is surely tested by the principles he possesses and by the doctrines he keeps, but the common or general principles of a man are not always to be ascribed to his religion but to the habits and moral precepts which he learns in society. I will here mention an anecdote to illustrate what I mean. Aristides and Themistocles both were Grecian heroes and rivals in the days of Grecian glory. Aristides by his influence procured the banishment of Themistocles. Themistocles with his usual good nature repaired to Darius who recognized him instantly, as he and Themistocles had been in the habit of arraying their respective armies against each other on their bloody war fields. Darius having received Themistocles in his interest, offered to support him on condition that he would teach war tactics to his soldiers. He complied with the request and resided at his Court for a series of years; but one day when the forces of Darius had been severely beaten, Darius in hopes that Themistocles would be glad to embrace an opportunity to avenge himself upon the Grecians for the unjust treatment he had experienced from them, requested him to muster his forces and proceed against them. As soon as these last words fell upon his ears, he silently swallowed a morsel of poison, informing him at the same time that it was his principle not to take arms against the country which gave him birth. This was the principle and spirit of that hero. If you read Grecian and Roman antiquities, you will find such characters as Socrates, Plato, Cicero, and several even among the ancient Hindus, who had some noble principles better understood among them than most of the modern infidels of civilized countries.

None can deny that religion has much influence upon the principles and characters of individuals and communities. Though infidelity is a heinous crime before God, yet it is often noticed that even an infidel cannot be induced to tell a falsehood, or commit a burglery or breach of trust against his principle. Further, notice the Nattoocotta Chitties of the Hindu race, who now monopolize nearly all trade by keeping up certain principles of honesty among themselves, although many of them, on every opportunity, cheat other classes of people and drain them of all their money. The traits of character which exist among these Chitties lead to the following conclusions, viz. *wealth* may be secured by keeping up a *principle of honesty*; *and wealth, character and influence* may be secured by keeping *purity of religious principles.*

Now if you read the histories of the different countries of the world and compare them with the present condition of this small tract of land—*Jaffna*, will you not say that something must be done by the leading part of this community to effect a change in this land in thoughts, feelings and actions, so as at least to resemble other civilized nations whom we honor for character and trust.

In order to find out your own deficiencies you are to be acquainted at least in part with the present real state of things in Jaffna.

1. The money we raise and pay to the Government is returned by the Government to its public officers and to erect buildings and construct roads for the public use and a portion of it is appropriated to instruct our youths.

2. It is calculated that about one hundred thousand Rix Dollars per annum are expended within this Province by the different Foreign Missionary Societies.

3. By exporting tobacco, chilly, jaggery, and a few other articles from this place, we receive in value some thousands of Rix Dollars from the continent and from other Provinces of our island, but if we enquire where this money which we get from various sources goes, we see that it goes into the hands of the Chitties who have stores on the continent, and into the trunks of the Nattoocotta Chitties who are here. They are our Godown keepers or Store keepers, as is known to all of you; whatever we want they furnish us as soon as they see our bill. If they should leave our country to-day, we should be distressed for want of proper supplies, as our countrymen have not hitherto felt that it was their privilege to cultivate proper principles to attain to that height of influence in mercantile matters which will secure that money that is now yearly drained and carried out to foreign places. All of you perhaps know that there is nothing to raise a nation to opulence like mercantile business.

Here you ought to know how the rich people in our country dispose of their money. Some put it out on interest at the rate of 9 or 12 per cent. The majority however unwisely prefer to give their money to purchase parcels of ground at the rate of £ 10 for one-sixteenth of an acre of ground, no matter whether such parcels are productive or not, if they only lie contiguous to their hereditary estates; others by reducing their money to jewelry, prevent the increase of their money. Suppose the said classes of people should join together and lay their money in a joint-stock as the companies of Merchants in the world do, and divide the profit among themselves according to their respective shares, what will be the aspect of this country? Why can't you that have small sums of money unite them in a common stock for useful undertakings and reap the profits by obtaining an ordinance from the Government for such specific undertakings.

I remain, your faithful servant,

*Oodoopitty,*
*Feb.* 22, 1849.

W. VOLK.

(To be continued.)

---

EARTHQUAKE AT NEW ZEALAND.—On the opposite side of the earth, about 3,000 miles south of the latitude of Ceylon lies the group of islands called New-Zealand. Together they are nearly four times as large as the island of Ceylon. The group consists of two large and numerous small islands and are in shape something like a gentleman's boot. The natives of New Zealand are savages. In 1815, missionaries first went there. By emigration and other causes the Europeans on the island gradually increased, and in 1840, it was first constituted a British Colony. The Europeans are now estimated at something over 10,000. They have three principal stations, of which Auckland is the capital. The Government officers consist of a Governor, Colonial Secretary and Treasurer, who with the attorney general and three senior justices of the peace compose the Legislative Council.—There are also a Bishop and 12 or more clergyman of the Church of England and between 60 and 70 ministers and missionaries of different denominations. We have given this brief geographical sketch for the information of our readers and as introductory to a description of several severe earthquakes experienced on these islands in the month of October last, the account of which has but just reached us.—Every one on reading this narrative ought to be thankful to Almighty God, that such awful visitations, have not hitherto been experienced here.

